# காற்றோட்டமானது கொவிட்-19 பரவுவதிலிருந்து பாதுகாக்க உதவுகிறது

## காற்றோட்டம் உங்கள் வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் காற்றை நகர்த்துகிறது.

TAMIL / TAMIL

## கொவிட்-19 எவ்வாறு பரவுகிறது

கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தொற்று துகள்களை காற்றில் வெளியிடலாம், அவர்கள்;

- சுவாசிக்கும் போது
- பேசும் போது
- பாடும் போது
- கத்தும் போது
- இருமும் போது
- தும்மும் போது

இந்த தொற்று துகள்களை நீங்கள் போதுமான அளவு உள்ளிழுத்தால் நீங்களும் தொற்றுக்குள்ளாகலாம்.

## கொவிட்-19 பரவுவதிலிருந்து காற்றோட்டம் எவ்வாறு பாதுகாக்க உதவுகிறது

காற்றோட்டம் காற்றில் உள்ள தொற்று துகள்களின் அளவைக் குறைக்க உதவுகிறது. இது நீங்கள் உங்கள் உடனடி வீட்டிற்கு வெளியே உள்ளவர்களுடன் இருக்கும் போது மிக முக்கியமானது.

## உங்கள் வீட்டில் காற்றோட்டம் மற்றும் காற்று வடிகட்டுதலை மேம்படுத்துவதற்கான வழிகள்

- புதிய காற்றின் குறுக்குத் தென்றலை உருவாக்க யன்னல்கள் மற்றும் கதவுகளை தவறாமல் திறக்கவும்.

  வெளியே குளிர்ச்சியாக இருந்தாலும் அல்லது ஈரமாக இருந்தாலும், உங்கள் யன்னலை சில நிமிடங்களுக்கு திறப்பது உதவியாக இருக்கும்.
- வெப்பமாக்கல் அல்லது காற்றோட்டம் மற்றும் குளிராக்கி (HVAC) அமைப்பை பயன்படுத்தவும்.
- வெப்பம் அல்லது ஆற்றல் மீட்பு வென்டிலேட்டர்களை தொடர்ந்து இயக்கவும்.
- சமையலறை அல்லது குளியலறை வெளியேற்ற மின்விசிறிகளை தொடர்ந்து இயக்கவும்.

  சுத்தமான மாற்றுக் காற்றை வழங்குவதற்கும், உட்புற மூலங்களால் உற்பத்தி செய்யப்படும் தேவையற்ற காற்று அசுத்தங்கள் சுற்றுவதை தவிர்ப்பதற்கும் ஒரு சாரளத்தை திறக்கவும்.
- அதிக திறன் கொண்ட துகள் காற்று (HEPA) வடிகட்டியுடன் கையடக்க காற்று சுத்திகரிப்பானை பயன்படுத்தவும்.

இயந்திர அமைப்புகளில் வழக்கமான பராமரிப்பு செய்ய நினைவில் கொள்ளுங்கள். காற்றோட்டங்கள் மற்றும் மின்விசிறிகளை சுத்தமாக வைத்திருங்கள், பரிந்துரைக்கப்படும்போது வடிகட்டிகளை மாற்றவும். முடிந்தால் HVAC முறை காற்றாடிகளை தொடர்ந்து இயக்கவும். இது சுத்தமான காற்றின் அளவை அதிகரிக்கும் மற்றும் உட்புறத்தில் தொற்று துகள்களை குறைக்கும்.

## ஒரு இடம் மோசமான காற்றோட்டமாக இருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள்

- திணிப்பு
- நிலையான நாற்றங்கள்
- இயந்திர காற்றோட்டம் அல்லது காற்று வடிகட்டுதல் இல்லை
- மூடிய யன்னல்கள் மற்றும் கதவுகள்
- அதிக ஈரப்பதன்
- படர் பூஞ்சணம்

கொவிட்-19 பரவுவதை தடுக்க காற்றோட்டம் ஒரு முக்கிய வழியாகும். இது மற்ற நோய்கள் பரவாமல் தடுக்கவும் உதவும். கொவிட்-19 க்கு எதிராக உங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்க மற்ற முக்கிய பொது சுகாதார நடவடிக்கைகளுடன் காற்றோட்டத்தை இணைக்கவும்.


கொவிட்-19 பற்றிய மேலதிக தகவலுக்கு: 1-833-784-4397 Canada.ca/le-coronavirus



Gouvernement du Canada Government of Canada

Canada